மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதைப்போல், இருக்கின்ற சட்டக் கல்லூரிகளிலே மாணவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்ற நிலை உருவானால்தான், மற்றொரு கல்லூரியைத் தொடங்குவதைப் பற்றி அரசு சிந்திக்கும் என்று தெரிவித்தேன். தருமபுரியைப் பொறுத்தவரையில், பக்கத்தில்தான் வேலூர், அங்கே சட்டக் கல்லூரி இருக்கிறது, சேலத்தில் இருக்கிறது, கோயம்புத்தூரில் இருக்கிறது. எல்லாவற்றையும்விட உங்கள் ஊர் மாணவர்கள் பெரும்பகுதியானவர்கள் குளிர்ச்சியாக பெங்களூருக்குத்தான் போகிறார்கள். ஆகையினாலே தருமபுரியிலே தொடங்கினாலும் அவர்கள் பெங்களூருக்குத்தான் போவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

முற்பகல் 10—10

2. தகவல் கோரல்

(அ) மூலவினாவையொட்டி துணைக் கேள்வி கேட்கும் வாய்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.*

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் கேள்வி நேரம் என்பது மிக மிக முக்கியமான நேரம். மூலக் கேள்வி கேட்பவர்களுக்கு மட்டும்தான் துணைக் கேள்விக்கு நீங்கள் அனுமதி அளிக்கிறீர்கள். மற்ற உறுப்பினர்களுக்கு துணைக் கேள்வி கேட்பதற்கு அனுமதி மறுக்கிறீர்கள். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் காலையிலே எழுந்தவுடனே, என்ன கேள்வி வந்திருக்கிறது என்பதைப் படிப்பதற்கான ஆர்வமே போய்விடும். முதல் ஒரு மணி நேரம் கேள்வி நேரம் என்றிருப்பதில் துணைக் கேள்விகளையும்

2010 ஏப்ரல் 23] [திரு. டி. சுதர்சனம்]

கேட்பதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும். கேள்வி நேரத்தை 10–30 மணிக்குள் முடித்துக்கொள்ளுங்கள்; அதிலே எந்தப் பிரச்சினையுமில்லை. ஒன்றிரண்டு துணைக் கேள்விகளையாவது கேட்பதற்கு நீங்கள் அனுமதிக்காவிட்டால், இங்கே இருக்கின்ற உறுப்பினர்களெல்லாம் இந்தச் சபையில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள மாட்டார்கள். படிப்பதற்கும் ஆர்வம் போய்விடும். கேள்வி நேரத்தில் சபைக்கு வருவதையே வீண் என்று நினைப்பார்கள். அதனால், நீங்கள் துணைக் கேள்விகளை அனுமதிக்க வேண்டும் என்ற தாழ்மையான வேண்டுகோளை உங்கள் முன்னாலே வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். இன்னோர் உறுப்பினர் கேட்கின்ற கேள்வியிலே நீங்கள் ஏன் ஒட்டிக்கொள்கிறீர்கள்? நீங்களே தனிக் கேள்வி போட வேண்டியதுதானே? மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினை காரணமாக நானும் சில கருத்துகளை வேண்டுகோளாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கேள்வி நேரம் என்று சொன்னால், அந்த நேரம் நியாயமான கேள்விகளுக்கு முழு நேரம் ஒதுக்குவதற்குப் பேரவைத் தலைவர் கடமைப்பட்டிருக்கிறார். கேள்வி என்று சொல்லி, மானியக் கோரிக்கையிலே பேசுவதைப்போல, இரண்டு நிமிடங்கள், மூன்று நிமிடங்கள் பேசிவிட்டு விடை கேட்பது என்பது, கேள்வி நேரத்திலே நியாயமாக பல ஆண்டுகளுக்கு முன்னாலேயிருந்து அனுமதிக்கப்படுவதில்லை. அண்மைக் காலத்திலேதான் அனுமதிக்கப்படுகிறது.

இரண்டாவதாக, ஒரு கேள்வி கேட்டால் துணைக் கேள்வி என்னும் பெயரால் திருநெல்வேலி மாவட்டத்திலே ஒரு கல்லூரி வருமா என்று கேட்டால், பல பேர், தஞ்சை மாவட்டத்திலே வருமா; சேலம் மாவட்டத்திலே வருமா என்று ஒவ்வோர் உறுப்பினரும் அவரவர்களுடைய தொகுதி அடிப்படையிலே ஒரு கேள்வியைத் தொடர் கேள்வியாகக் கேட்கிறபோது அவையினுடைய நேரம், நியாயமாக அனுமதிக்கப்பட வேண்டாத

கேள்விகளை அனுமதிக்க வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்படுகிறது. எனவே, துணைக் கேள்விகளை அனுமதிப்பதும், அனுமதிக்காததும் அந்தந்தச் சூழ்நிலைகளுக்கேற்ப பேரவைத் தலைவர் தீர்மானிக்க வேண்டும். மிக முக்கியமான கேள்வி என்றால், அதில் துணைக் கேள்வி என்றால், எதிர்க்கட்சித் தலைவரே எழுந்திருந்து கேட்டு, அந்தக் கேள்வியைப் பதிவு செய்யலாம்.

(ஆ) ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையிலுள்ள நளினி செல்ஃபோனில் பலருடன் தொடர்புகொண்டது—நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால் நான் இதே அவையில், எங்களுடைய அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுடைய படுகொலை வழக்கில் முக்கியக் குற்றவாளியான நளினி அவர்கள், அவருடைய கைகளிலே செல்ஃபோனை வைத்துக்கொண்டு சிறையிலே கடந்த நான்காண்டுகளாக வெளிநாடுகளில் இருப்பவர்களுடன் பேசினார்கள் என்ற ஒரு கருத்தை இந்த இடத்திலே எழுப்பினேன். அதற்கு அமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள். "விசாரணையில்தான் அவர்கள் நான்காண்டுகளாகப் பேசினார்களா, இல்லையா என்பது தெரிய வரும்" என்று சொன்னார்கள். அவர் செய்தது, cognizable offence. A case has been registered under section 353, preventing the Government Servants from discharging their duties, அப்புறம் 186 and 201—disappearance of the evidence என்று வழக்குகள் பதிவு செய்து, 42–வது விதி, Prison Manual பிரகாரம், அதிலேயும் வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். So far she has not been arrested. That is what we learnt. எனவே நான் அரசிடம் கேட்பதெல்லாம், இப்படிக் குற்றம் செய்த அவர் இதுவரை கைது செய்யப்பட்டாரா? இல்லையா? அவருக்கு இன்னும் முதல் வகுப்பு அளிக்கப்பட்டு வருகிறதா? அவர் தனிச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறாரா அல்லது அங்கேயிருக்கக்கூடிய சிறைத் துறை அலுவலர்கள் அவருக்கு உதவிபுரிந்த காரணத்தினாலே, அந்தச் சிறையிலேயே வைத்திருப்பது சரியா அல்லது வேறு சிறைக்கு அவரை மாற்றப் போகிறீர்களா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.